# அமைச்சர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - அரசு அலுவலர்கள் - கழக நிர்வாகிகள் தீவிரம்!

# புயல் வெள்ளம்: உறக்கமின்றி பணியாற்றி மக்கள் துயர் நீக்கும் கழக அரசு!



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என் நேரு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் சோழிங்கநல்லூர் மண்டலம், நூக்கம்பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகளை பார்வையிட்டு நேற்று ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மண்டல கண்காணிப்பு அலுவலர் வீரராகவ ராவ், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், சோழிங்கநல்லூர் மண்டலக் குழுத் தலைவர் மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், அனகாபுத்தூர் சீனிவாசபுரத்தில் பகுதி I, II, III ஆகிய தெருக்களில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் அங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் உணவு பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு உணவு, தண்ணீர், பால் போன்ற அத்தியாவசிய பொருட்களை படகு மூலம் கொண்டு செல்லப்படுவதை பார்வையிட்டனர். உடன் மாவட்ட அட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசு செயலாளர் சமயமூர்த்தி, மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், 4.12.2023 அன்று நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள, தாழ்வானப் பகுதியில் குடியிருந்த 50 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி, அங்கு தங்கி உள்ளவர்களுக்கான இலவச மருத்துவ முகாமினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். பி.எழிலரசன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க.சங்கீதா, வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், சென்னை மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் 7 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கு உணவு தயாரிக்கும் பணியை பார்வையிட்டு திருவொற்றியூர் தேரடி சன்னதி தெரு, கங்கா ஜெயராஜன் திருமண மண்டபத்தில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார். உடன் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு மற்றும் அரசு அலுவலர்கள், பகுதி கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு , பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் பெருங்குடி மண்டலம், வார்டு188, மடிப்பாக்கம் குபேரன் நகர் பகுதியில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட களப்பணிகளைப் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு பால், ரொட்டி உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினர். இந்த ஆய்வின்போது, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்திரமோகன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.வி. ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி செ. சமீனா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு மற்றும் நடுகுத்தகை ஊராட்சிகளில் புழல் மழையினால் குடியிருப்பு பகுதிகள் பாதிக்கப்பட்டு முகாம்களின் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் அமைச்சர் எம்.ஆர்.கேபன்னீர்செல்வம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால் ரொட்டி போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். ஆவடி மேயர் ஜி. உதயகுமார், ஜி.ராஜேந்திரன், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, மா.இராஜி, பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், எம். மோகன், கே.சுரேஷ்குமார், சத்தியாகோ.ரவி, ஆர்.செந்தாமரை, ஜி.துர்கா பிரசாத், என்.லட்சுமி, மற்றும் பி.எல்.ஆர்.யோகா, சாந்தி, பாண்டியன், மனோகரன் வ.ஹரி, உதயா, ஹரிபாபு, ராஜேஷ், சூரியாகுமார், உள்பட பலர் உடன் உள்ளனர்



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, கண்டோன்மெண்ட் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 300 நரிக்குறவர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – உணவு பாதுகாப்பு துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் உணவு, தண்ணீர், பால் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட அட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை அரசு செயலாளர் சமயமூர்த்தி, நகரச் செயலாளர் டி.பாபு ஆகியோர் உள்ளனர்.




அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மிக்ஜாம் புயலால் உருவான கனமழையால் பாதிக்கப்பட்ட அம்பத்தூர் தொழிற் பேட்டையைப் பார்வையிட்டார். அம்பத்தூர் ஏரியில் இருந்து கொரட்டூர் ஏரிக்குச் செல்லும் கால்வாயில் மழைநீர் பெருக்கெடுத்ததால் பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிட்டு நிரந்தர தீர்வு காண்பதற்காக அம்பத்தூர் தொழிற்பேட்டை கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். அவர்கள் அளித்த கோரிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று நிரந்தர தீர்வுக் காணப்படும் எனவும் உறுதியளித்தார்.